செ.வெ.எண்.879/2020 நாள்: 15.12.2020

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முதல் நாள் (Christmas Eve) முன்னிட்டு 24.12.2020 (வியாழக்கிழமை) அன்று கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அனைத்து மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் உள்ளூர் விடுமுறை வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

**(2)** 24.12.2020 (வியாழக்கிழமை) அன்று அறிவிக்கப்பட்டுள்ள உள்ளூர் விடுமுறைக்கு ஈடாக 2021 பிப்ரவரி மாதம் இரண்டாவது சனிக்கிழமை (13.02.2021) அன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் மாநில அரசு அலுவலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு வேலை நாளாக இருக்கும்.

**(3)** கன்னியாகுமரி மாவட்டத்திற்கு கிறிஸ்துமஸ் பண்டிகைக்கு முதல் நாள் (Christmas Eve) உள்ளூர் விடுமுறை செலவாணிச்சட்டம் 1881(Under Negotiable Instruments Act 1881)ன் படி அறிவிக்கப்படவில்லை என்பதால் கன்னியாகுமரி மாவட்டத்தில் தலைமைக் கருவூலம் மற்றும் கிளைக் கருவூலங்கள் அரசு ஈடுபாடு சம்பந்தப்பட்ட அவசரப் பணிகளைக் கவனிக்கும் பொருட்டு, தேவையான பணியாளர்களைக் கொண்டு 24.12.2020 (வியாழக்கிழமை) அன்று இயங்கும் என கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.